பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 22 திங்கட்கிழமை 06.07.2020 கதிர் 110

## வெடிக்காத குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 07

மருதனார்மடம் - கைதடி வீதியில் பழைய வெடிகுண்டு ஒன்று வெடிக்காத நிலையில் கண்டறியப்பட்டுள்ளது என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்துக்கு அண்மையாக

2

# வேட்பாளர்களை குடும்பமாக படம் பிடிக்கும் சி.ஐ.டியினர்!

## அச்சுறுத்தும் நடவடிக்கை என்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரிடம் முறைப்பாடு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 06

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வீடுகளுக்குத் தினமும் செல்லும் புலனாய்வாளர்கள் வேட்பாளர்களையும் அவர்களது குடும்ப உறவுகளையும் புகைப்படம் எடுத்து அச்சுறுத்தும் வகையில் நடந்துகொள்கின்றனரென யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரிடம் நேரில் முறையிட்டப்பட்டுள்ளது.

2

## சஜித்தான் பிரதமர்!

கொழும்பு, ஜூலை 06

சஜித் பிரேமதாஸவே நாட்டின் அடுத்த பிரதமர் என பதுளை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

பொதுத் தேர்தலின் பின்னர் சஜித் பிரேமதாஸவை பிரதமராக்குவதே தமது இலக்கு எனவும் அவர் குறிப்பிட்டார்.

2

## பொருளாதாரத்தை மீட்க ஐ.தே.கவால்தான் முடியும்

### சொல்கிறார் ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, ஜூலை 06

சரிந்துக் கொண்டுச் செல்லும் இலங்கைப் பொருளாதாரத்தை மீட்க ஐக்கிய தேசியக்கட்சியால் மட்டுமே முடியும் என்று அந்தக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

2

## தேர்தல் சுவரொட்டிகளுடன் இருவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 06

வட்டுக்கோட்டையில் தேர்தல் விதிமுறைகளை மீறிச் சுவரொட்டிகளை ஒட்டிய குற்றச்சாட்டில் இரண்டு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஒருவரது சுவரொட்டிகளுடனேயே இருவரும் நேற்றிரவு கைது செய்யப்பட்டனர் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் கூறினர்.

2

## 115 நாட்களுக்குப் பின்னர் இன்று சகல பாடசாலைகளும் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூலை 06

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கடந்த மார்ச் மாதம் மூடப்பட்டிருந்த அனைத்துப் பாடசாலைகளும் 115 நாள்களுக்கு பின்னர் இன்று மீண்டும் கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பித்தன.

கல்வியமைச்சின் அறிவித்தலின்படி, சுகாதார வழிப்படுத்தலுக்கு அமைய இரண்டாம் கட்டத்தின் கீழ் இன்று பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

கடந்த மாதம் 29ஆம் திகதி முதற் கட்டமாக பாடசாலைகள் திறக்கப்பட்டு

2

## ஒரு லட்சம் வேலைவாய்ப்பு பட்டியல் அரசியல்வாதியிடம் சென்றது எப்படி?

கிளிநொச்சி, ஜூலை 06

ஒரு இலட்சம் வேலை வாய்ப்பை வழங்கும் புதிய அரசின் திட்டத்துக்கு அமைவாகக் கடந்த சில மாதங்களுக்கு முன் நேர்காணல் நடத்தப்பட்டுபொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இதில் அரசியல் செல்வாக்கு இருக்கக்கூடாது என ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவை பிறப்பித்திருந்தார்.

இந்தநிலையில் இந்த வேலை வாய்ப்புக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் யாழ். தேர்தல் மாவட்டத்தில் தேசிய கட்சி ஒன்றில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்கு கிடைக்கப்

2

## யாழ். பேராலய வளாகத்தில் நடமாடியவர் கைதாகினார்!



(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 07

யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் இல்லத்துக்கு அருகே மரியன்னை பேராலய (பெரிய கோயில்)

2

## ஒற்றையாட்சி காப்போம் என்று உறுதியுரை 'ஒரு நாடு;இரு தேசம்' எனப் போலித் தேசியம்!

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை சாடுகிறார் தவராசா

யாழ்ப்பாணம், ஜூலை 06

இலங்கை அரசமைப்பின் ஒற்றையாட்சியை பேணிப்பாதுகாப்போம் என வேட்புமனுவில் உறுதியுரை எடுத்து விட்டு 'ஒரு நாடு இரு தேசம்' என தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் போலித் தேசியம் பேசி வருகின்றனர் எனத் தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, இவர்கள் கொள்கையில் உறுதியாக இருக்கின்றார்கள் என்றால் உழைப்புக்காகச் சட்டத்தரணி தொழிலைக்கூடச் செய்திருக்கக்கூடாது என்றும் கூறினார்.

இதுதொடர்பில் அவர் இன்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் -

இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசமைப்பை உறுதியாகப் போற்றிக் காப்பேன் என்று பயபக்தியுடன் சத்தியப்பிரமாணம் செய்தே நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேர்தலில் சகல வேட்பாளர்களும் வேட்பு மனுவில் கையொப்பம் இட்டுள்ளனர். அவ்வாறானால் ஒரு நாடு, இரு தேசம் எனக்கோசம் போடுபவர்கள்

2



## பொருளாதாரத்தை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிலியந்தலையில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மக்களுக்கு பணம் கொடுக்கவேண்டிய இந்தக் காலக்கட்டத்தில், இந்த அரசு மக்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்கிறது.

ஜப்பானின் ஜெய்க்கா நிறுவனம், நிதியமைச்சுக்கு அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையின் சமகால அரசின் நிதிக் கொள்கைகள் தொடர்பாக அவதானத்துடன் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

அரசு என்ன சொல்கிறது? சர்வதேச நாணய நிதியத்திடம் சென்று கடன் கோரியுள்ளது.

இந்த நிதியமானது பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ், மாலைத்தீவுக்கு கடன் வழங்கியுள்ளது. ஆனால், இலங்கைக்கு மட்டும் கடன் கிடைக்கவில்லை. 80 கோடி டொலர் இதன் ஊடாகப் பெற்றுக் கொண்டிருக்க முடியும்.

இந்த அரசுக்கு இதனை தேடிக் கொள்ள முடியாது. இதிலிருந்து மீண்டு மக்களுக்கு நிவாரணமளிக்கக்கூடிய ஒரே ஒரு கட்சி ஐக்கிய தேசியக் கட்சி என்பதை நான் இவ்வேளையில் கூறிக்கொள்கிறேன் - என்றார்.

## சஜித்தான் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவிக்கையில் –

பதுளை மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களின் இருப்பையும், கலை - கலாசார பண்பாட்டு விழுமியங்களை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அப்படியானால் தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை தக்கவைத்துக்கொள்ளும் வகையில் மக்கள் வாக்களிக்க வேண்டும் - என்றார்.

## வேட்பாளர்களை ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ். மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பிரதிநிதிகளுக்கும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் இடையான சந்திப்பு நேற்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போதே இந்த முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.

வேட்பாளர்களைப் புகைப்படம் எடுக்கும் புலனாய்வாளர்கள், தினமும் எங்கே போறாய், எங்கு பிரசாரக் கூட்டம் எனப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்துகின்றனர். அவ்வாறு புலனாய்வாளர்கள் ஒரு புறம் நெருக்கடியை ஏற்படுத்தும் அதே வேளை, இராணுவத்தினரும் அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றனர்.

வேட்பாளர்கள் பயணிக்கும்போது வீதிகளில் வழிமறிக்கும் படையினர், தேர்தல் பிரசுரம் இருக்கின்றாதா, துண்டுப்பிரசுரம் கொண்டு போகின்றீர்களா எனவிசாரிக்கின்றனர். தேர்தல் பணியில் அலுவலர்களும் அவர்களுக்கு உதவியாக பொலிஸாருமே செயல்படவேண்டிய நிலையில் படையினரின் நடவடிக்கைகள் அச்சுறுத்தலாகவுள்ளன - என இந்தச் சந்திப்பில் பங்கேற்ற வேட்பாளர்கள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் பதிலளித்த மாவட்ட செயலர் –

இந்த விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளரது கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும் எனப் பதிலளித்தார்.

## வெடிக்காத .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று மாலை இந்த வெடிகுண்டு கண்டறியப்பட்டது.

அதனை மீட்டு செயலிழக்க வைப்பதற்கான அனுமதி மல்லாகம் நீதிமன்றில் பெறப்படும். அதன் பின்னர் வெடிகுண்டு அந்தப் பகுதியிலிருந்து அகற்றப்படும் என்றும் சுன்னாகம் பொலிஸார் கூறினர்.

# குருமன்காட்டில் திடீரென்று முளைத்த சோதனைச் சாவடி



வவுனியா, ஜூலை 06

வவுனியா, குருமன்காட்டுச் சந்திக்கு அருகில் புதிதாக இராணுவச் சோதனைச் சாவடியொன்று இன்று திங்கட்கிழமை அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் அந்த வீதி வழியாகப் பயணிக்கும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் அதிகளவு நடமாடும் குருமன்காடு பகுதியிலேயே இந்த இராணுவச் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வீதி ஊடகப் பயணிக்கும் வாகனங்கள் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். பேராலய வளாகத்தில் நடமாடியவர் ...............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வளாகத்தினுள் சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கைது நடவடிக்கை இன்று நண்பகல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் தற்போது, தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்.

மன்னார் பேசாலை தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் நடமாடிய மர்ம நபர் தொடர்பில் வடக்கு மாகாணம் முழுவதும் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்ட நிலையில் இந்தச் சம்பவம் இன்று இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒற்றையாட்சி காப்பேரம் என்று உறுதியுரை ...............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எந்த அடிப்படையில் வேட்புமனுவில் கையொப்பமிட்டு தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இலங்கை அரசமைப்பில் ஒற்றையாட்சி அரசமைப்பு எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இரு தேசம் எனக் கோசம் போடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஒற்றையாட்சி அரசமைப்பை ஏற்று அதனைப் பாதுகாப்போம் எனச்சத்தியம்செய்தேதற்போதைய தேர்தலில் களம் இறங்கியுள்ளனர்.

தங்களது உரைகளில் ஒரு நாடு, இரு தேசம் எனபேசிவரும் இவர்கள் இலங்கை அரசமைப்பின் இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒற்றையாட்சி முடியரசைப் பேணிப் பாதுகாப்போம் என்று கையெப்பமிட்டுவிட்டே மக்களிடம் போலிப் பிரசாரங்களை மேற்கொண்டு வாக்குகளுக்காக திரிகின்றனர். ஒற்றையாட்சி அரசமைப்பை பாதுகாப்போம் எனக் கையெப்பமிட்டுவிட்டு இவர்கள் என்ன செய்வதற்காக இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினின் பல சட்டத்தரணிகள் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் களம் இறங்கியுள்ளனர். இவர்கள் சட்டக் கல்லூரிகளில் படித்துவிட்டுச் சட்டத்தரணி தொழில் ஈடுபடும்போது இதே உறுதிமொழியை - அதாவது ஒற்றையாட்சி அரசமைப்பை பேணிப் பாதுகாப்போம் என்று சத்தியப் பிரமாணம் செய்தே - சட்டத்தரணி தொழில் ஈடுபட்டு வருகின்றனர்.

அப்படியானால் உழைப்பதற்கு மட்டும் ஒற்றையாட்சி அரசமைப்பை பாதுகாப்போம் என்ற உறுதி, அரசியலுக்காக ஒரு நாடு, இரு தேசம் என்ற போலிப்பிரசாரம். இதுதான் இவர்களின் உண்மை முகம். இவர்கள் உண்மையிலேயே கொள்கையில் உறுதியாக இருக்கின்றார்கள் என்றால் இவர்கள் உழைப்பதற்காகக் கூட ஒற்றையாட்சி அரசமைப்பின் மீது சத்தியப்பிரமாணம் செய்திருக்கக்கூடாது.

1983 ஆம் ஆண்டு 6 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் பின்னர் இலங்கையில் இருக்கின்ற சகல அரச உத்தியோகத்தர்கள், சட்டத்தரணிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இலங்கை அரசமைப்பை பேணிப்பாதுகாப்போம் என உறுதியுரை செய்யவேண்டும் எனத் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

இதன்போது அமிர்தலிங்கம் போன்றோர் அரசமைப்பின் உறுதியுரை எடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தங்களது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் இராஜினாமாச் செய்திருந்தார்.

ஆனால் குமார் பொன்னம்பலம் தாம் சட்டத்தரணியாக கடமையாற்றுவதற்கு இலங்கையில் உறுதியுரை எடுத்தால் மக்களுக்குத் தெரிந்துவிடும் என்று திருட்டுத்தனமாக மலேசியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் இலங்கை அரசமைப்பைப் பேணிப் பாதுகாப்பேன் என்று உறுதியுரை எடுத்திருந்தார் என்பதை மக்கள் இன்றும் நினைவில் வைத்திருப்பார்கள். - என்றார்.

## ஒரு லட்சம் வேலை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெற்றுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அந்த வேட்பாளர், தெரிவு செய்யப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு தனது யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி அலுவலகங்களுக்கு அவர்களை அழைத்து, தானே அந்த வேலைவாய்ப்பைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுத்தார் எனவும், எனவே இந்தத் தேர்தலில் தனக்கே வாக்களிக்கவேண்டும் என்று கோரி வருகின்றார் எனவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் தேர்தலில் போட்டியிடும் ஏனைய கட்சிப் பிரதிநிதிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து, அவர்கள் இந்த விடயத்தை மாவட்டத் தேர்தல் அலுவலகத்திடம் சுட்டிக்காட்டியுள்ளதோடு, அந்தப் பெயர்ப் பட்டியல் எவ்வாறு குறிப்பிட்ட அரசியல் வாதிக்குச் சென்றது எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## தேர்தல் சுவரொட்டி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைது செய்யப்பட்ட இருவரும் இன்று திங்கட்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

## 115 நாட்களுக்குப் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிருமி தொற்று நீக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அதிபர், ஆசிரியர்கள் மாத்திரம் பாடசாலைக்குச் சமூகமளித்திருந்தனர்.

இந்நிலையில் இரண்டாம் கட்டமாக தரம் 05, தரம் 11 மற்றும் 13ஆம் தர மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் உரிய சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட்டு இன்று ஆரம்பமாகின.

தரம் 05 மாணவர்களுக்கு காலை 7.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

அத்தோடு, தரம் 11 மற்றும் தரம் 13 மாணவர்களுக்கு காலை 7.30 தொடக்கம் மாலை 3.30 வரை கல்வி நடவடிக்கைகள் இடம்பெறும்.

வடக்கில் நேற்று அனைத்துப் பாடசாலைகளிலும் உரிய சுகாதார நடைமுறைகள்பின்பற்றப்பட்டு கற்றல், செயற்பாடுகள் ஆரம்பமாகின.

# நூறு அடி பள்ளத்தில் பாய்ந்த லொறி



நானுஓயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நானுஓயா – ஹட்டன் பிரதான சோட்கட் வீதியில், ரதல்ல கார்லிவெக் பகுதியில் லொறி ஒன்று நூறு அடிப் பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்கு உள்ளாகியதில் இருவர் காயமடைந்தனர். அந்த இருவரும் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் இன்று காலை 10 மணி அளவில் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலன்னறுவையில் இருந்து நுவரெலியாவுக்கு அரிசி கொண்டு சென்று, மீண்டும் பொகவந்தலாவை பகுதியை நோக்கி சென்று கொண்டிருக்கும் போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தினால் லொறி பாரிய சேதத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து பார ஊர்தியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இடம்பெற்றுள்ளதாக பொலிஸார், மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நானு ஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நிதி மோசடி; நேற்று மட்டும் 57 பேர் கைது

மேல் மாகாணத்தில் இடம்பெற்ற நிதி மோசடி நடவடிக்கையுடன் தொடர்புடைய 57 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். மேல் மாகாண ஊழல் விசாரணை பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் 48 ஆண்களும் 9 பெண்களும் அடங்குகின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

பண மோசடி, நிதி சட்டத்தை மீறியமை, போலி ஆவணங்களைத் தயாரித்தமை உள்ளிட்ட 70 குற்றச்சாட்டுக்களின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நீதிமன்றங்களில் இன்று ஆஜர்படுத்தப்படவிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000

மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இடதுசாரிகளிடம் ஒரு கேள்வி

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நீக்கவோ, மாற்றவோ கூடாது. அந்தச் சட்டத்தைப் பலப்படுத்த வேண்டும் என்று லங்கா சமசமாஜக் கட்சியின் செயலாளரும் முன்னாள் மாகாண ஆளுநருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்திருக்கின்றார்.

பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாதிக்கச் சிந்தனைப் போக்கின் உச்சத்தில் பொதுஜன பெரமுனவின் தலைவர்கள் எல்லோரும் ஒரேயடியாக உறுதியாக நிற்க, அத் தரப்பில் உள்ள ஓரிரு இடதுசாரிகள் மட்டும் கொஞ்சம் வித்தியாசமாக வேறுபட்டு சிந்திக்கின்றார்கள்; கருத்து வெளியிடுகின்றார்கள்.

அந்த வகையில் திஸ்ஸ விதாரணவுடன், ஜனநாயக இடதுசாரி முன்னணியைச் சேர்ந்த வாசுதேவ நாணயக்கார போன்ற இடதுசாரிகள் அதிகாரப் பரவலாக்கலுக்கு வழி செய்யும் 13 ஆவது திருத்தத்துக்கு ஆதரவான போக்கை வெளிப்படுத்தி நிற்கின்றனர்.

இப்படி சிறுபான்மையினர் பக்கம் சற்றுத் தாராளப் பார்வையுடன் நடக்கும் தலைவர்களை பௌத்த, சிங்களப் பேரினவாதிகளின் கூட்டமான பொதுஜனப் பெரமுன எவ்வளவு தூரம் விட்டுப் பிடிக்கும் என்பது போகப் போகத்தான் தெரியும்.

சிறுபான்மையினரின் தயவின்றி, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்குமானால், அரசமைப்பில் சிறுபான்மையினருக்குச் சார்பான அல்லது அவர்களுக்கு ஏதேனும் வகையில் தனித்துவமான உரிமைகளை உறுதி செய்கின்ற எல்லா ஏற்பாடுகளையும் அடியோடு அகற்றி விட வேண்டும் என்பதுதான் மொட்டுத் தலைமையினது சிங்களப் பேரினவாதப் பார்வைத் திட்டமாகும்.

திஸ்ஸ விதாரண, வாசுதேவ நாணயக்கார போன்ற இடதுசாரிகள் பெரும் சுனாமி போல எழக் கூடிய பேரினவாத அரசியல் அலைக்கு முன்னால் நிமிர்ந்து நின்று, உரக்கக் குரல் கொடுத்து, சிறுபான்மையினருக்காக உறுதியாக நிற்பார்கள் என்று நம்புவதற்கு இடமேயில்லை. இலங்கையின் இடதுசாரிகள் தொடர்பில் வரலாறு அத்தகைய பட்டறிவைத்தான் எமக்குத் தந்து நிற்கின்றது.

ஒடுக்கப்பட்ட ஓர் இனத்தின் தேசிய போரட்டத்துக்கு மேலானதாக வர்க்கப் போராட்டத்துக்கு முன்னுரிமை கொடுத்தமைதான் இந்த இடதுசாரிகளின் வரலாறு.

தமிழ் மக்களின் தேசிய உணர்வெழுச்சியை - தேசியப் பற்றுறுதியை - வெறும் இனவாதத் தேசியத்தின் பிற்போக்கு வடிவமாக முலாம் பூசிக் காலங் காலமாக விமர்சித்து வந்தவர்கள் இவர்கள்.

அதுவும் மாத்திரமல்ல, தமது மனச்சாட்சிக்கு மாறாக, இத்தகைய அடாத்தான விமர்சனங்களை முன் வைத்தபடி, அதன் அடிப்படையில் இரண்டு இனங்களுக்கும் இடையே முக்கிய முரண்பாடாக நிலவிய தேசிய ஒடுக்கு முறையை அடையாளம் கண்டு ஏற்பதற்குப் பதிலாக, அதற்கு மாறுபட்டு நின்றவர்கள்.

அது மாத்திரமல்ல, ஒடுக்கப்பட்ட ஓரினத்தின் தேசியப் போராட்டத்தின் உட்கிடைகளைப் புரிந்து, ஏற்றுக் கொள்ள மறுத்து, அந்தப் போராட்டத்தை ‘பயங்கரவாதமாக’ சித்திரித்து, அதனை அழிப்பதற்குப் பேரினவாதிகளுடன் தோழமை சேர்ந்து பங்காற்றி பெரும் வரலாற்றுத் தவறிழைத்தவர்கள்.

ஓரினத்தின் தேசியத்தையே ஒடுக்குமுறை கபளீகரம் பண்ணிக் கொண்டிருக்க, அதனை சட்டை செய்யாமல், தொழிலாளர் வர்க்க ஒருமைப்பாடு, சுரண்டலுக்கு எதிரான புரட்சி என்றெல்லாம் விதண்டாவாதம் பண்ணிக் கொண்டிருந்தவர்கள். அந்த அசட்டையீனத்தின் மூலம் பேரினவாதக் கொடூரங்களைக் கண்டிக்கத் தவறி அவற்றுக்குத் துணை போன சரித்திரச் சங்கடங்களை சாதனைகளாகப் புரிந்தவர்கள். இத்தகைய இடதுசாரிகளே இன்று வெளிப்பூச்சுக்கு 13ஆவது திருத்தத்தை நீக்கக் கூடாது, மாற்றக் கூடாது, முழு அளவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றெல்லாம் கதை விடுகின்றனர்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினால் கருக்கட்டி அதன் மூலம் பிறந்த பிள்ளைதான் 13 ஆவது அரசமைப்புத் திருத்தம்.

பொலிஸ் அதிகாரங்கள் உட்பட அதன் கீழ் மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட பகிரப்பட்ட அதிகாரங்கள் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவேயில்லை. 31 ஆண்டுகள் கடந்தும் அவற்றில் பல வெறுமனே அரசமைப்பின் அச்சுப்பிரதியில் எழுத்தில் கிடக்கின்றன. அவ்வளவே.

13 ஆவது திருத்தத்தை வலுப்படுத்த வேண்டும் என்று யாழ்ப்பாணத்தில் கதை விடும் திஸ்ஸ விதாரண போன்றோர், அதே 13 ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட பொலிஸ் அதிகாரங்கள் போன்றவற்றை நடைமுறைப்படுத்துங்கள் என்று பச்சையாகத் தமது நாட்டுத் தலைவர்களிடம் - ராஜபக்ஷக்களிடம் - பகிரங்கமாகக் கோருவார்களா?

# உண்மையான பௌத்தன் தானே என்கின்றார் சஜித்

## ஓட்டாமவடியில் அவரே தெரிவிப்பு

**நான் இந்த நாட்டிலே உண்மையான பௌத்தனாக இருக்கிறேன். பௌத்த கோட்பாட்டினை நூறு வீதம் பின்பற்றி நடக்கின்ற ஒருவன் என்று ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



ஐக்கியமக்கள் சக்தி கட்சியின் முதலாவது தேர்தல் பிரச்சார கூட்டம் கடந்த சனிக்கிழமை ஓட்டமாவடியில், ஓட்டமாவடி பிரதேச சபை த்தவிசாளர் ஐ.ரீ.அஸ்மி தலைமையில் இடம் பெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் சொன்னவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:–

ரணசிங்க பிரமேதாஸாவின் பௌத்த சித்தாந்தத்தை ஏற்று நடக்கின்ற ஒருவன் நான். சமுகங்களுக்கிடையிலே பேதமை மற்றும் பிரித்தாளுகின்ற தன்மையை எந்தச் சந்தர்ப்பத்திலும் புத்தர் சொன்னவரல்லர்.

நாங்கள் எதிர்காலத்தில் ஆட்சி அமைக்கும் சந்தர்ப்பத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலே வீடில்லாப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். கடந்த காலத்திலே மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐயாயிரம் வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்திருக்கிறேன். அதனால் சொல்கிறேன். எதிர் காலத்தில் வீடில்லாப் பிரச்சினையை என்னால் தீர்க்க முடியும் என்று. நம்பிக்கை கொள்ளுங்கள்.

அதே போன்று இந்த மாவட்டத்திலே கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு ஆகிய மூன்று தொகுதிகள் இருக்கின்றன. அந்தத் தொகுதிகளில் நகரங்களை மையப்படுத்தி தொகுதிக்கு ஒரு நவீன தொழில் பேட்டையை உருவாக்க உள்ளோம். அத்தோடு அந்தத் தொழில் பேட்டைகள் பிரதேச செயலாளர் பிரிவு தோரும் விஸ்தரித்து இந்த பிரதேசத்தில் இருந்து வெளியூர்களுக்கு தொழிலுக்காக செல்லும் இளைஞர், யுவதிகளுக்கு தமது பிரதேசத்திலே தொழில் செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதுடன் நாட்டின் அபிவிருத்தியில் உங்களையும் பங்காளர்களாக ஆக்குவேன்.

வாழைச்சேனை மீன்பிடி துறைமுகத்தை நவீன மயப்படுத்தித் தருவதோடு இந்த பிரதேசத்தில் இருக்கின்ற விவசாய சமூகத்திற்கு நெல் களஞ்சியசாலை அமைத்து தருவதோடு விவசாய சமூகம் பேசிக்கொண்டு இருக்கின்ற விழாலோடை மற்றும் மூக்கிரயன் ஓடை திட்டத்தை எனது நேரடிக்கண் காணிப்பில் செய்து தருவேன் என்று உறுதி கூறுகிறேன்.

கடந்த ஜனாதிபதி தேர்தலிலே இந்த பிரதேசத்திலே இருக்கின்ற அனைத்து மக்களும் எனக்கு அதிகபடியான வாக்கினைத் தந்தீர்கள். அதற்கு நான் நன்றிக்கடன் பட்டவனாக இருக்கிறேன்.எனக்கு அதிகாரம் கிடைக்கின்றபோது அலரி மாளிகையிலோ அல்லது ஜனாதிபதி மாளிகையிலோ நான் தங்கியிருக்கப் போவதில்லை. உங்களில் ஒருவனாக

நான் இருந்து கண்களால் பார்க்கக்கூடிய, காதுகளால் கேட்கக்கூடிய, வாய்களால் பேசக்கூடிய தூரத்திக் இருந்து இந்த மக்களுக்குச் செய்வதற்கு நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களது கட்சி கடந்த காலத்திலும் நிகழ் காலத்திலும் வாய்ச்சாடலுக்கு பேசுகின்ற கட்சியல்ல.

மற்றக் கட்சிகள் போல் வெல்கின்றோமா, தோற்கின்றோமா என்று பார்க்கின்ற கட்சியல்ல எங்களது கட்சி. எங்களுக்குத் தேவையானது மக்களை சந்தோசமாக வைத்துக் கொள்வதுதான். ர்க்கவுள்ளோம்.

கடந்த காலத்திலே மட்டக்களப்பு மாவட்டத்திற்கோ, திருகோணமலை மாவட்டத்திற்கோ அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் இருக்கவில்லை. நான் உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தேர்தலின் பின்னர் நாங்கள் அமைக்கப்போகின்ற அரசாங்கத்திலே மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதிப்படுத்தும் ஒருவரை நான் அமைச்சரவைக்கு அழைத்துச் செல்லக் காத்துக் கொண்டு இருக்கிறேன்.

நான் இந்த நாட்டிலே உண்மையான பௌத்தனாக இருக்கிறேன். பௌத்த கோட்பாட்டினை நூறு வீதம் பின்பற்றி நடக்கின்ற ஒருவன். ரணசிங்க பிரமேதாஸாவின் பௌத்த சித்தாந்தத்தை ஏற்று நடக்கின்ற ஒருவன் நான். சமூகங்களுக்கிடையிலே பேதமை மற்றும் பிரித்தாளுகின்ற தன்மையை எந்தச் சந்தர்ப்பத்திலும் புத்தர் சொன்னவரல்லர்.

புத்த பெருமானின் போதனைக்கு மாறாக, தெரியப்படுத்தாத விடயங்களை திரிவுபடுத்திக் கூறி இனங்களுக்கிடையிலே முரண்பாடுகளைத் தோற்றுவித்து, ஒரு சில அரசியல்வாதிகள் அவர்களுடைய சந்தர்ப்பவாத அரசியலுக்காகச் செயற்படுவது கவலைக்குறிய விடயமாகவுள்ளது. உண்மையான பௌத்தன் இனங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தும் வகையில் செயற்பட மாட்டான்.

பௌத்த மதத்தைப் பொறுத்தவகையிலே இந்த நாட்டின் அரசியல் யாப்பில் அதற்கென்று தனியான கௌரவமான இடம் அளிக்கப்பட்டுள்ளது. அதே போன்று மற்றைய மதங்களை மதிக்க வேண்டும் என்று யாப்பிலே தெட்டத்தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த விதமான பயங்கரவாத நிகழ்சி நிரலுக்கும் எங்களது ஆட்சியில் இடமளிக்கப் போவதில்லை. இந்த நாட்டிலே இனமத பேதம் இல்லாமல் பயங்கரவாதம் இல்லாமல் இனங்களுக்கிடையில் முரண்பாடு இல்லாமல் அனைத்து விடயங்களையும் துடைத்தெறிந்து இந்த நாட்டிலே நல்லதெரு சமுதாயத்தை உருவாக்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை எங்களது ஆட்சியில் நிலை நாட்டுவேன்.

இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கின்ற அரசாங்கள் நாட்டை வழிநடத்திக் கொள்ள முடியாத ஓர் இக்கட்டான நிலையில் உள்ளார்கள் என்று உங்கள் அனைவருக்கும் தெரியும். அவர்கள் ஒன்றில் மட்டும் கெட்டிக்காரர்கள். முஸ்லிம்களையும் பௌத்தர்களையும், பௌத்தர்களையும் இந்துக்களையும், முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் பகைவர்களாக ஆக்கி வைக்கின்ற விடயங்களை மாத்திரம் நன்றாக செய்யக்கூடியவர்கள் என்று நான் சொல்லத்தேவையில்லை. இவ்வாறு செய்து விட்டு நாட்டில் ஒற்றுமையை எதிர்பார்க்க முடியாது.

கொரோனா வைரஸை முஸ்லிம்கள்தான் நாட்டுக்குக் கொண்டுவந்தார்கள் என்று சொல்லி முஸ்லிம்கள் மிகவும் மோசமானவர்கள் என்று சொல்லப் பார்த்தார்கள். அது வெற்றியளிக்கவில்லை. நீங்கள் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும். அடிப்படைவாதமாக இருந்தாலும் சரிதான், பயங்கரவாதமாக இருந்தாலும் சரிதான், சாதி பேதத்திற்கு அப்பால் நின்று வெல்ல வேண்டும் என்ற தேவைப்பாடு இருக்கின்றது. அந்த அடிப்படையிலே நீங்கள் எல்லோரும் ஒற்றுமைப்பட்டு செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். – என்றும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# பாராட்டுகள், புகழாரங்களுக்கு மத்தியில் 3ஆம் இடத்துக்கு முன்னேறியது இந்தியா

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியில் ரஷ்யாவைப் பின்னுக்குத் தள்ளி இந்தியா 3 ஆவது இடத்தைத் தனதாக்கியது.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதில் இந்தியப் பிரதமர் மோடி தலைமையிலான அரசு முன்மாதிரியாகவும், மிகச் சிறப்பாகவும் செயற்படுகின்றது என்று இந்திய ஊடகங்களும், இந்தியரப் பிரதானிகளும் புகழ்ச்சி வெளிப்படுத்தி வந்த நிலையில் இந்தியாவின் இந்த முன்னேற்றம் பதிவாகியுள்ளது.

இந்தியாவில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 7 லட்சத்தை நெருங்குகிறது. இது வரை இல்லாத வகையில் கடந்த 24 மணிநேரத்தில் கொரோனாவால் 24 ஆயிரத்து 248 பேர் பாதிக்கப்பட்டனர். 425 பேர் உயிரிழந்தனர். தொடர்ந்தும் பலர் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இது வரை இந்தியாவில் கொரோவானால் 6 லட்சத்து 97 ஆயிரத்து 836 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 4 லட்சத்து 24 ஆயிரத்து 891 பேர் குணமடைந்துள்ளனர். 2 லட்சத்து 53 ஆயிரத்து 287 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். குணமடைந்தோர் சதவீதம் 60.85 ஆக உள்ளது.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட நாடுகளில் அமெரிக்கா. பிரேசிலுக்கு அடுத்தபடியாகத் தற்போது இந்தியா உள்ளது.

இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 6 ஆயிரத்து 619 ஆக அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 151 ஆக அதிகரித்துள்ளது. தலைநகர் டெல்லியில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை ஒரு வட்சத்தைத் தொடவுள்ளது. குஜராத்தில் 36ஆயிரத்து 37 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.



ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்கம், ஆந்திரா, பஞ்சாப், தெலங்கானா, ஜம்மு காஷ்மீர், கர்நாடகா, ஹரியாணா, பிஹார், கேரளா என இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் பாதிக்கப்பட்டவர்களின் தொகை அதிகரித்துள்ளது.

# போராட்டத்தில் குதித்தனர் கொரோனா நோயாளிகள்!




இந்தியாவின் தமிழக மாநிலத்தின் கன்னியாகுமாரி மாவட்டத்திலுள்ள நாகர்கோவில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கொரோனா நோயாளிகளுக்கு உணவு கொடுக்காததால் நோயாளிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொரோனவால் பாதிக்கப்பட்ட 362 பேர் நாகர்கோவில் அரச மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் இன்று காலை அந்த நோயாளிகளுக்கு வெகு நேரமாகியும் உணவு கொடுக்காததால், நோயாளிகள் உணவுத் தட்டுடன் மருத்துவமனையின் கீழ் தளத்தில் ஒன்கூடிப் போராட்டம் நடத்தினர்.

தமது போராட்டத்தின் போது மருத்துவமனை ஊழியர்களுடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இது குறித்து மருத்துவமனை நிர்வாகத்திடம் கேள்வியெழுப்பிய போது மருத்துவமனையில் கொரோனாத் தொற்றுக்குச் சிகிச்சை பெற்று வரும் பலருக்கு வீட்டிலிருந்து உணவு வரும் என்பதால், தமது தரப்பினர் உணவு தயார் செய்யவில்லை என்று பதிலளித்தனர். தொற்றாளர்கள் தமது போராட்டத்தைத் தொடர்ந்த நிலையில் சிறிது நேரத்தில் அவர்களுக்கு உடனடியாக உணவைத் தயார் செய்து மருத்துவமனை நிர்வாகம் வழங்கியதால் போராட்டம் முடிவுக்கு வந்தது.

# ட்ரம்ப்புக்கு மோடி வாழ்த்து!



அமெரிக்காவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு அமெரிக்க அதிபர் ட்ரம்ப்புக்கு இந்தியப் பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்தார்.

மோடியின் வாழ்த்துக்குப் பதிலளிக்கும் விதமாக அதை ஏற்றுக்கொண்ட ட்ரம்ப் மோடிக்கு நன்றி தெரிவித்தார்.

அமெரிக்காவின் 244ஆவது சுதந்திர தினத்தையொட்டிக் கடந்த சனிக்கிழமை அமெரிக்க அதிபர் மாளிஷ்கையில் ட்ரம்ப் தலைமையில் விழா ஒன்று நடந்தேறிய நிலையில் மோடி கீச்கம் மூலம் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

மோடியின் வாழ்த்துச் செய்திக்கு நன்றி தெரிவித்துக் கீச்சகத்தில் ட்ரம்ப் பதில் அனுப்பியுள்ளார். இந்தியா - சீனா எல்லைப் பிரச்சினை முற்றியுள்ள தருணத்தில் அமெரிக்கா - இந்தியா இடையிலான நெருக்கம் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# மோடியின் எல்லைப் பயணமே சீனா பின்வாங்கக் காரணம்

## இந்திய ஊடகங்களின் கண்டுபிடிப்பு இது



எல்லைப் பகுதியிலிருந்து சீன இராணுவம் பின்வாங்கியுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், இந்தியப் பிரதமர் மோடி எல்லைப் பகுதியில் மேற்கொண்ட பயணமே சீன இராணுவம் அங்கிருந்து பின்வாங்குவதற்குக் காரணம் என்று இந்திய ஊடகங்கள் மூலமாகச் செய்திகள் பரப்பப்பட்டன.

மோடியின் எல்லைப் பயணத்தைத் தொடர்ந்து ஒரு தீர்க்கமான மற்றும் உறுதியான செய்தி சீனாவுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று இந்திய ஊடகங்கள் மேலும் தெரிவிக்கின்றன. எல்லை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு உலகளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றும் தேசிய பாதுகாப்பு மிக முக்கியமானது என்ற தீர்க்கமான செய்தியை இந்தியா அனுப்பியுள்ளது என்றும் அந்தச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

# நெய்வேலி மின் நிலைய விபத்தில் காயமடைந்தோர் அடுத்தடுத்து சாவு!

## சாவு எண்ணிக்கை 11 ஆக உயர்வு

இந்தியாவின் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில் நிகழ்ந்த கொதிகலன் வெடி விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 11 ஆக அதிகரித்திருக்கிறது.

ஜூலை 1ஆம்திகதி நெய்வேலி என்.எல்.சி அனல்மின் நிலையத்தில் தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டு கொண்டிருக்கும் போது கொதிகலன் வெடித்துச் சிதறி விபத்துக்குள்ளானது. இதில் தொழிலாளர்கள் 6பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் 17 பேர் தீக்காயங்களுடன் உயிருக்கு ஆபத்தான நிலையில் சென்னை அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தனர். அவர் களில் சிவகுமார் என்ற பொறியாளாலர் கடந்த 3ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மேலும், செல்வராஜ் என்ற ஒப்பந்தத் தொழிலாளியும், ரவிச்சந்திரன் என்ற பொறியாளலரும் சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தனர். 3 தொழிலாளர்கள் சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழுந்துவிட்டதால் சாவு எண்ணிக்கை 9 ஆக அதிகரித்திருந்தது.

இன்று காலை சென்னையில் சிகிச்சை பெற்று வந்த வைத்தியநாதன் என்ற என்.எல்.சி பணியாளர் உயிரிழந்திருக்கிறார். இதனால் நெய்வேலி நிலக்கரி சுராங்க கொதிகலன் வெடி விபத்தில் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆக அதிகரித்திருந்தது. இந்நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒரு ஊழியர் உயிரிழந்தார். இதனால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்துள்ளது. தொடர்ந்து, காயம் அடைந்துள்ள 13 பேருக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# ஜப்பானில் கடும் மழை 40 பேர் பரிதாபச் சாவு

ஜப்பானின் தென்மேற்குத் தீவான கியுஷூவில் தொடர்ந்து பெய்த மழையால் பெரு வெள்ளம் ஏற்பட்டது.

இதன் காரணமாக 40 பேர் இறந்துவிட்டதாக அஞ்சப்படுகிறது. மழைநீர் அதிகரிப்பால் அங்குள்ள ஆறுகளின் அணைகள் உடைகின்ற அபாயம் இருப்பதால் அந்தப் பகுதிகளில் இருந்து மக்களை வெளியேற்றுமாறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வார இறுதியில் பெய்யத் தொடங்கிய மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண் சரிவுகளில் 21 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் 18 பேரைக் காணவில்லை என்றும் முதற்கட்டத் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில் தற்போது 40பேர் வரையில் இந்த இடர் காரணமாக உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த இடர் காரணமாகக் கிட்டத்தட்ட 2இலட்சம் பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.




## ஒரு கரண்டி மண்ணில் 400 பூஞ்சைகள்

பிரேசிலின் அமேசன் காடுகளில் உள்ள ஒரு கரண்டி மண்ணில் 400 பூஞ்சைகள் உட்பட ஆயிரத்து 800 நுண்ணுயிரிகள் உள்ளன என ஆய்வு ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டது.

லண்டனைச் சேர்ந்த பேராசிரியர் அலெக்ஸாண்ட்ரே அன்டோனெல்லி தலைமையிலான ஆராய்ச்சியாளர்களே இதைக் கண்டுபிடித்தனர்.

அமேசன் காடுகளில் ஒரு கரண்டி மண்ணில் நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான நுண்ணுயிரிகளைக் காண முடியும் என்று பேராசிரியர் அலெக்ஸாண்ட்ரே அன்டோனெல்லி குறிப்பிடுகிறார்.

உயிரிப் பல்வகைமை அறிவியலின் அடுத்தக்கட்ட ஆய்வை மேற்கொள்வதாயின் பூஞ்சைகள் குறித்து அறிவது மிகவும் அவசியம் என்றும் அவர் மேலும் கூறுகிறார்.



பூஞ்சைகள் பெரும்பாலும் நிலத்தடியில் புதைந்திருப்பதால், ஆராய்ச்சிகளின்போது அவை புறக்கணிக்கப்படுகின்றன. வெப்பம் அதிகமுள்ள நாடுகளில் மண்ணில் புதைந்திருக்கும் பூஞ்சைகள் குறித்துச் சரியான புரிதல் இல்லை.

அமேசன் மழைக்காடுகளில் உள்ள மண்ணைப் பற்றி அறியஇ அங்குள்ள நான்கு பகுதிகளிலிருந்து மண் மற்றும் இலைக் குப்பைகளின் மாதிரிகளை ஆராய்ச்சியாளர்கள் சேகரித்து அவற்றை ஆய்வுக் குட்படுத்தியதிலேயே இந்த முடிவுகள் தெரியவந்துள்ளன.

## கொரோனா காற்றில் பரவாது!

மனிதர்கள் மூலம் மனிதர்களுக்குக் கொரோனா வைரஸ் பரவும். ஒருமனிதர் தும்மும்போதும், இருமும்போதும் அதிலிருந்து வெளிவரும் நீர்த் துளிகள் மூலம் பரவும்.

பாதிக்கப்பட்டவர்கள் தொடும் பொருள்களை மற்றொருவர் தொட்டு முகத்தில் தேய்க்கும்போது கொரோனா பரவும் என்றெல்லாம் உலக சுகாதார அமைப்பு அறிவுறுத்தியிருந்த நிலையில் அதை மாற்றி, காற்றிலும் கொரோனா வைரஸ் பரவும் என்று அறிவிக்க வேண்டும் என்று நூற்றுக் கணக்கான ஆய்வாளர்கள் கடிதம் உலக சுகாதார நிறுவனத்தை வலியுறுத்தினர்.

காற்று மூலம் கொரோனா வைரஸ் பரவும் என்பது குறித்த ஆய்வுக் கட்டுரையை 32 நாடுகளைச் சேர்ந்த 239 அறிவியல் வல்லுநர்கள், ஆய்வாளர்கள் அடுத்த வாரம் வெளியிட உள்ளனர்.

உலக சுகாதார அமைப்பின் நோய்த்தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டின் தொழில்நுட்பப் பிரிவு தலைவர் மருத்துவர் பெனிடெட்டா அலிகிரான்ஸி இதற்குப் பதிலளிக்கையில், கொரோனா வைரஸ் காற்றில் பரவுவதற்கான சாத்தியங்கள் இருக்கின்றனவா என்பதைக் கடந்த இரு மாதங்களாகக் கணித்து வருகிறோம். ஆனால், அதற்கான உறுதியான, நிலையான ஆதாரங்கள் இல்லை எனத் தெரிவித்தார்.

## சமூக இடைவெளியை பின்பற்றிக் குடிக்கலாம்!

### பிரிட்டனின் உத்தரவால் பொலிஸாருக்கு அசௌகரியம்



பிரிட்டனில்கடந்தசனிக்கிழமையிலிருந்து அனைத்து மதுபான சாலைகளும் திறக்கப்பட்டன. கொரோனாத் தொற்றுக் காரணமாக மூடப்பட்டிருந்த நிலையிலேயே அவை திறக்கப்பட்டன.

3 மாதங்களாக மூடப்பட்டிருந்த அவை திறக்கப்பட்ட சூழலில்இ மிகுந்த எச்சரிக்கையுடன் பாதுகாப்புத் தொடர்பான கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்து மது அருந்தலாம் என்று பிரிட்டனின் மருத்துவ நிபுணர்களும், அமைச்சர்களும் தெரிவித்தனர்.

ஆனாலும் போதை தலைக்கேறிய பின்னர் பலரும் சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கிறார்களில்லை என்று லண்டன் நகரப் பொலிஸார் தெரிவித்தனர்.

மதுபான சாலைகள் திறக்கப்பட்டதிலிருந்து தினமும் இரவுகள் பர பரப்புடன் நகர்கின்றன. போதை தலைக்கேறியவர்களைப் பொலிஸ் அதிகாரிகள் முடிந்தவரை திறன்படச் சமாளிக்க வேண்டியிருக்கின்றது. சில பகுதிகளில் பிரச்சினைகள் ஏற்பட்டு அதிகாரிகள் தாக்கப்பட்டதும் நடந்துள்ளது என்றும் பொலிஸ் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

லண்டன் உள்ளிட்ட பிரிட்டனின் பல இடங்களில் பெருந்திரளாக மக்கள் மதுபான விடுதிகளில் அருகருகே அமர்ந்து மது அருந்துவதைச் சித்திரிக்கின்ற ஒளிப்படங்கள் மற்றும் காணொலிகள் வெளியாகியுள்ளன. இவை கொரோனாத் தொற்றுக் குறித்த அச்சத்தை ஏற்படுத்துவதாகக் கூறப்படுகிறது.

## வீழ்ந்து எரிந்த விமானத்துக்குள் ஒரு தொகைப் போதைப் பொருள்





மெக்சிக்கோவின் யுகடன் தீபகற்பத்தில் சட்டவிரோதமாகத் தரையிறங்கிய சிறிய விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகித் தீப்பிடித்த நிலையில் மெக்சிக்கோ இராணுவத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டது.

யுகடன் தீபகற்பத்தில் குயின்டனா ரூ மாநிலத்தில் பெடரல் நெடுஞ்சாலை 184 இல் எரிந்து கொண்டிருந்த அந்த விமானத்திலிருந்து 30கிலோநிறையுடைய கோகோய்ன் போதைப்பொருள் 13 பொட்டலங்களில் இருந்து எடுக்கப்பட்டது.

மரங்கள் நிறைந்த நெடுஞ்சாலையில் விமானத்தின் பாதி எரிந்த நிலையில் காணப்பட்ட இந்த விமானம் வெனிசுலாவின் மராக்காய்போவிலிருந்துவந்ததுஎன்று கூறப்படுகிறது.

**போதைக் கடத்தல் அதிகரிப்பு**

கடந்த சனிக்கிழமை மெக்சிக்கோவில் போதைப் பொருள் கடத்தல் காரர்கள் 12பேரை அந்த நாட்டு இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர். போதைக் கடத்தல்காரர்கள் இராணுவ உடையில் நடமாடியபோதே இராணுவத்தினரால் இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாண எல்லையிலுள்ள மெக்சிக்கோவின் தமுயல்பாஸ் மாகாணத்தின் நுவா லியோன் என்ற பகுதியின் எலலையோரத்தில் இந்தச் சம்பவம் நடந்தது. தற்போது விமானத்திலிருந்து ஒரு தொகைப் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

மெக்சிக்கோவில் போதைக் கடத்தல் அதிகரித்திருப்பதையே இவ்விரு சம்பவங்களும் எடுத்துக் காட்டுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

# 13 ஆவது திருத்தத்தை நீக்க, மாற்றக் கூடாது!

## யாழில் உறுதிபடக் கூறுகிறார் கூறுகின்றார் திஸ்ஸ விதாரண

(எஸ்.நிதர்ஷன்)

**அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கக் கூடாது. அந்தச் சட்டத்தை பாதுகாத்து பலப்படுத்த வேண்டுமென லங்கா சமசமாஜக் கட்சியின் செயலாளரும் முன்னாள் மாகாண ஆளுநருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்துள்ளார்.**

வடக்கிற்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ள அவர் யாழ் ஊடக அமையத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை ஊடக சந்திப்பொன்றை நடாத்தியிருந்தார். அச்சந்திப்பின் போது அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நீக்க வேண்டுமெனத் தெற்கில் முன்னெடுக்கப்படும் பிரச்சாரங்கள் குறித்து எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலையே மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

இலங்கையில் அரசமைப்பில் உள்ள 13 ஆம் திருத்தத்தை நீக்க முடியாது. அச்சட்டம் மாற்றப்படவும் கூடாது. அரசமைப்பில் தற்போதுள்ள அச் சட்ட மூலம் பாதுகாத்து பலப்படுத்தப்பட வேண்டும். அதுவே நல்லது என்பதே என்னுடைய நிலைப்பாடாக இருக்கிறது.

மேலும் இந்தச் சட்டமூலம் போன்று பலவற்றையும் நீக்க வேண்டும், மாற்ற வேண்டுமென பலரும் பலவற்றையும் கூறுவார்கள். ஆனால் அவை குறித்து அரசாங்கம் எதனையும் அறிவிக்கவில்லை. ஆகவே 13 ஆவது திருத்தம் மாற்றப்படவோ நீக்கப்படவோ கூடாது என்பதே எனது நிலைப்பாடாக இருக்கிறது. இந்தச் சட்ட மூலம் தொடர்பில் அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டுமென்றார்.

மேலும் நாடு இராணுவ ஆட்சியை நோக்கி நகர்வதாகவும் எதிர்காலத்தில் இராணுவ ஆட்சி ஏறபடலாமெனவும் பல அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகளும் முன்வைக்கின்ற குற்றச்சாட்டுக்கள் குறித்து கேள்வி



எழுப்பிய போது அக் குற்றச்சாட்டுக்களை அவர் அடியோடு மறுத்தார். அரசியலுக்காக திட்டமிட்ட வகையில் இவ்வாறான பொய்ப் பிரசாரங்களை சிலர் முன்னெடுத்து வருகின்றனர் எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்தோடு நாட்டில் ஜனாதிபதியாக இருக்கின்றவர் ஜனநாயக முறைப்படி மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். அதே போன்று நாடாளுமன்றத்திற்கு மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக ஜனநாயக ரீதியான தேர்தலொன்று நடக்க இருக்கின்றது.

ஆகவே ஜனநாயக ரீதியான செயற்பாடுகளே முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் அரசியலுக்காக – அதுவும் தேர்தல் காலம் என்பதால் – பலரும் பல்வேறு பொய்களைப் பரப்பி வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.




# ஜிந்துப்பிட்டி நபருக்கு கொரோனா இல்லை!

## 154 பேரும் வீடுகளுக்கு

கொழும்பு, ஜிந்துப்பிட்டியில் கொரோனா வைரஸ் தொற்றாளர் என அடையாளம் காணப்பட்டு, வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நபருக்கு, 5 தடவைகள் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளைத் தொடர்ந்து அவருக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு 13, கொட்டாஞ்சேனை, ஜிந்துப்பிட்டி பிரதேசத்தில் கொரோனா தொற்றுடைய நபர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை 154 பேர் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

வெளிநாட்டிலிருந்து குறித்த நபர் நாடு திரும்பி இருந்ததால் சுகாதரப் பிரிவினால் அதிக கவனத்துடன் கண்காணிக்கப்பட்டார் என்று அனில் ஜாசிங்க கூறியுள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

வெளிநாட்டிலிருந்து வந்த கடல் பாதுகாப்புப் பணியாளரான குறித்த நபர் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வந்த நிலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில், அவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது அடையாளம் காணப்பட்டது. உடனே அவர், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து அவருடன் நேரடித் தொடர்பு கொண்டதாக அடையாளம் காணப்பட்ட 29 குடும்பங்களைச் சேர்ந்த 154 பேர், கந்தக்காடு தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஆனால், பாதிக்கப்பட்டவருக்கு வைத்தியசாலையில் வைத்து 5 தடவைகள் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகளின் அடிப்படையில், அவர் கொரோனா நோயாளி அல்ல என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கந்தக்காடு தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட 154 பேரும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டமைக்கமைய அவர்கள் எவரும் கொரோனா நோயால் பாதிக்கப்பட்டதாக அடையாளம் காணப்படவில்லை.

அதன்பிரகாரம், கொரோனா நோயாளி என ஆரம்பத்தில் அடையாளம் காணப்பட்ட குறித்த நபர் வைத்தியசாலையிலிருந்து வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

தனிமைப்படுத்தலுக்காக அனுப்பி வைக்கப்பட்ட 154 பேரையும் அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது – என்றுள்ளது.

# சு.கவை விமர்சிக்காதீர்!

## 'மொட்டு' கட்சி வேட்பாளர்களிடம் மஹிந்த அமரவீர வேண்டுகோள்

தற்போதைய நிலைமையில் அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைப்பது உறுதியாகும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விமர்சித்து அந்த வாய்ப்பை இல்லாமலாக்கிக்கொள்ள வேண்டாம். சந்தர்ப்பத்தைப் பாதுகாத்துக்கொள்வது 'தாமரை மொட்டு' கட்சி வேட்பாளர்களின் பொறுப்பாகும்.

– இவ்வாறு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.



அகுனுகொலபெலஸ்ஸ பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எதிர்வரும் பொதுத் தேர்தல் மிகவும் முக்கியமான தேர்தலாகும். இதில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி வெற்றி பெறுவது உறுதியாகும். எனினும், மூன்றில் இரண்டு பெறும்பான்மைப் பலத்தை பெற்று உறுதியான அரசு அமைப்பதே எமது இலக்காகும்.

அதற்கு நாங்கள் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விமர்சிப்பவர்கள், தங்களுக்குள் இருக்கும் வேதனையிலே அவ்வாறு செயற்படுகின்றனர் என்பது எமக்குத் தெரியும்.

ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விமர்சிப்பவர்களில் அதிகமானவர்களின் தாய் கட்சியாக இருப்பது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியாகும். அவர்கள் முதலாவதாக நாடாளுமன்றம் சென்றது இந்தக் கட்சியில் இருந்து என்பதை அவர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் – என்றார்.

# பாடசாலைக்குள் மாணவர் முகக்கவசங்கள் அணிவது கட்டாயமானது அல்லவாம்!

பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குள் முகக்கவசங்கள் அணிய வேண்டியது கட்டாயமில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாள் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இன்று காலை தனியார் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் காய்ச்சல், இருமல் போன்ற அறிகுறிகள் குழந்தைகளுக்கு இருந்தால் அவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டாம் என சுகாதார பணிப்பாளர் நாயகம் பெற்றோர்களிடம் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, கொவிட் – 19 காரணமாக மூன்று



மாதங்களுக்கு பின்னர் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டன எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த 29 ஆம் திகதி முதல் பாடசாலைகளில் தொற்று நீக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் இன்று இரண்டாம் கட்டமாக மாணவர்கள் பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்டனர் என அமைச்சின் செயலாளர் என்.எம்.எம் சித்ராநந்த தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இன்றைய தினம் 5, 11 மற்றும் 13 ஆம் தரங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் மாத்திரம் பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்டனர்.

பாடசாலைகளுக்கு சமுகமளிக்கும் 11 மற்றும் 13 ஆம் தரங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்குக் காலை 7.30 முதல் பிற்பகல் 3.30 வரையில் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், 5 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு காலை 7.30 முதல் பிற்பகல் 1.30 வரையில் பாடசாலை நடத்தப்படும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் சகல ஆசிரியர்களுக்கும் காலை 7.30 க்கு பாடசாலைக்கு சமுகமளிக்க வேண்டிய அவசியம் இல்லை என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கற்பிக்கும் பாடநெறி ஆரம்பமாவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னர் அவர்கள் பாடசாலைகளுக்கு சமுகமளித்தல் போதுமானது எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் என்.எம்.எம் சித்ராநந்த தெரிவித்துள்ளார்.



## இந்தியக் கடலோர பாதுகாப்புப் படையினர் 6 இலங்கை மீனவர்களைக் காப்பாற்றினர்

இந்தியக் கடற்பரப்பில் விபத்துக்குள்ளாகி கடலில் தத்தளித்த மீன்பிடி படகொன்றில் இருந்த 6 இலங்கை மீனவர்களை இந்திய கடலோர பாதுகாப்புப் படையினர் காப்பாற்றியுள்ளனர்.

தமிழகத்தின் சென்னையில் இருந்து 170 கடல் மைல் தொலைவில் அமைந்துள்ள கடற்பரப்பில் வைத்து இந்த மீனவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

படகு விபத்துக்கு உள்ளான இடத்திற்கு அருகில் நேற்று சென்றுக்கொண்டிருந்த இந்திய வர்த்தக கப்பல் ஒன்றில் மூலம் இந்திய கடலோர பாதுகாப்புப் படையினர் இலங்கை மீனவர்களைக் காப்பாற்றியுள்ளனர். அப்போது இந்த இந்திய வர்த்தக கப்பல், விசாகப்பட்டணம் துறைமுகத்தை நோக்கி சென்றுக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'ரேட் எவ்வளவு?' என்று கேட்டவரை இழுத்துப் போட்டு உதைத்த பெண்!

யாழ். நகரப் பகுதியில் வைத்து இளம் பெண் ஒருவரிடம் 'ரேட் எவ்வளவு?' என்று கேட்டு தரக்குறைவாக நடந்து கொண்ட நபரை அந்த பெண்ணே இழுத்துப் போட்டு உதைத்துள்ளார்.

இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.15 மணியளவில் யாழ்.பிரதான பஸ் நிலையத்திற்கு அருகில் நடந்த இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவது:-

யாழ்.பிரதான பஸ் நிலையத்திற்கு அருகில் நடமாடித்திரிந்து அதிர்ஷ்ட லாப சீட்டு விற்பனை செய்யும் நபர் ஒருவர் அங்கு வந்த இளம் பெண் ஒருவரிடம் 'ரேட் எவ்வளவு?' என்று கேட்டுள்ளார். தரக்குறைவான வார்த்தைப் பிரயோகம் செய்த அந்த நபரை முறைத்துப் பார்த்த அந்தப் பெண் விடயத்தை பெரிதுபடுத்தாமல் அங்கிருந்து சென்றுள்ளார்.

அங்குள்ளவியாபாரநிலையம்ஒன்றில்பொருள்களை வாங்கிக் கொண்டு மீண்டும் அவ்வழியான வந்த அந்த பெண்ணை கண்ட குறித்த அதிர்ஷ்ட லாபச் சீட்டுக்கள் விற்பனை செய்யும் நபர் மீண்டும் 'ரேட் எவ்வளவு?' என்று கேட்டுள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த அந்த பெண் தன்னிடம் தரக்குறைவாக பேசியவரை இழுத்துப் போட்டு உதைத்துள்ளார். உதைத்ததுடன் மட்டும் நிறுத்திக் கொள்ளாத அந்த பெண் அவரை பொலிஸ் நிலையம் வருமாறு கோரி இழுத்துச் சென்றுள்ளார்.

இதன் போது அந்த நபர் பெண்ணின் காலில் விழுந்து தன்னை மன்னித்து விடுமாறு கதறியதை அடுத்து அவரை பிழைத்துப் போகுமாறு சொல்லிய அந்தப் பெண் இனி இவ்வாறு பெண்களிடம் தரக்குறைவாக நடந்தால் நிலைமை மோசமாகும் என்று எச்சரித்துச் சென்றுள்ளார்.

# பல தலைவர்களின் உழைப்பில் உருவான வீடு இன்று சுமந்திரனினால் இடிக்கப்படுகின்றது!

## 'மாம்பழம்' ஐங்கரநேசன் தெரிவிப்பு









வாக்குகளைச் சிதறடித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோற்கடிப்பதற்கும் வீட்டுச் சின்னத்தை இல்லாமல் ஆக்குவதற்குமே மாற்றுஅணி என்று சொல்லிக் கொள்பவர்களும் பல சுயேச்சைக் குழுவினர்களும் நாடாளுமன்றத் தேர்தலில் இறக்கிவிடப்பட்டுள்ளார்கள் என்று கூட்டமைப்பு வேட்பாளர்கள் தேர்தல் கூட்டங்களில் பேசிவருகிறார்கள். கூட்டமைப்பை மற்றவர்கள் அல்ல, அவர்களே சிதைத்து வருகிறார்கள். தந்தை செல்வநாயகம், வன்னியசிங்கம், நாகநாதன், அழகக்கோன், இராஜவரோதயம், இராசமாணிக்கம், அமிர்தலிங்கம் போன்ற பல தலைவர்களின் உழைப்பால்உருவானவீடஎம்.ஏ.சுமந்திரன்அவர்களாலேயே இன்று இடிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் நாடாளுமன்றத் தேர்தலில் மாம்பழம் சின்னத்தில் சுயேச்சையாகப் போட்டியிடுகின்றது. இதன் பரப்புரைக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக் கிழமை கோண்டாவிலில் இடம்பெற்றபோதே முதன்மை வேட்பாளரான பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஜனநாயக வழியில் முன்னெடுத்துச் செல்லும் நோக்குடனேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. விடுதலைப் புலிகள்தான் தங்களை உருவாக்கினர் எனக் கூட்டமைப்பினரே சொல்லிவருகிறார்கள். ஆனால், விடுதலைப்புலிகள் போரில் தோற்கடிக்கப்பட்டதும் கூட்டமைப்பு படிப்படியாகத் தன்னைப் புலி ஆதரவு நீக்கம் செய்ததோடு, தமிழ்த் தேசிய நீக்கத்தையும் செய்துவருகிறது.

முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது தமிழினப் படுகொலையே என்று உலக நாடுகளின் பல தலைவர்களும் கூறிவரும் நிலையில், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் இனப்படுகொலை நடைபெறவில்லை, அதற்கான ஆதாரங்கள் இல்லை என்று சொல்லி இலங்கை அரசாங்கத்தைப் பாதுகாக்கும் விதமாகவே செயற்பட்டார். இவர்களே, போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையையே இல்லாமல் செய்கின்ற அரசாங்கத்தின் சூழ்ச்சி நிரலுக்கு அமைவாகத் தமிழ்மக்களின் உணர்வுகளைப் புறந்தள்ளிக் காலநீடிப்பைப் பெற்றுக்கொடுத்து அரசாங்கத்தைப் பிணையெடுத்தார்கள். இவையே கூட்டமைப்பின் கூடாரம் இன்று காலியாகிக் கொண்டிருப்பதற்கான காரணங்கள் ஆகும்.

இப்போது தமிழ்மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளைத் தொடர்வதற்கு மீண்டும் தங்களுக்கு ஆணை வழங்குமாறு, கடந்த தேர்தல்களின்போது பாடிய அதே பல்லவியை மீண்டும் பாட ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்கள் ஆணை கேட்பது காணாமல் போனவர்களைக் கண்டறிவதற்காகவோ அரசியல் கைதிகளை விடுவிப்பதற்காகவோ அல்ல. நல்லாட்சி அரசாங்கத்தில் வகித்து வந்த நிழல் அமைச்சர்கள் பதவிகளை மீண்டும் பெறுவதற்காகவே ஆணை கோரி நிற்கிறார்கள். தமிழ்மக்கள் இந்தப் போலித் தேசியவாதிகள் குறித்து விழிப்பாக இருக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# விக்கிக்கு வீழும் வாக்கு ஒவ்வொன்றும் இன்னொரு சுமந்திரனை உருவாக்கும்

## எச்சரிக்கின்றார் ரெலோ வேட்பாளர்

விக்னேஸ்வரனிற்குப் போடுகின்ற ஒவ்வொரு வாக்கும் இன்னொரு சுமந்திரனை உருவாக்கும் என்பதை மறந்து விடாதீர்கள் என வன்னி மாவட்ட வேட்பாளரும் முன்னாள் வட மகாணசபை உறுப்பினருமான செ.மயூரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளி கட்சியான தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தேர்தல் பிரசார அலுவலக திறப்பு வழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர் –

வன்னி தேர்தல் களத்தில் இன்று பலர் பல கட்சிகளில் போட்டியிடுகின்றனர். இதில் பெரமுனவில் போட்டியிடுகின்ற ஜனக நந்தகுமாரவுக்கு வன்னியில் வாக்களிப்பதற்கு தகுதியில்லை. அதேபோல் மான் சின்னத்தில் போட்டியிடுகின்ற நீல் சாந்தவுக்கு வன்னியில் வாக்களிப்பதற்கு தகுதியில்லை. இவ்வாறாக பல வேட்பாளர்கள் இங்கு களம் இறக்கப்பட்டுள்ளனர். எனவே நீங்கள் வாக்களிக்கப்போகின்றவர்களுக்கு இங்கு வாக்குரிமை உள்ளதா என்பதனை நீங்கள் பார்க்க வேண்டும்.

இவர்கள் இங்கு இறக்கப்பட்டதற்கான காரணத்தினை அறிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் வடக்கு, கிழக்கு எமது தாயகப்பிரதேசம்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதித்துவம் இருக்கின்ற நிலப்பரப்பு.

இந்த நிலையில் எமது பிரதிநிதித்துவத்தினையும் வாக்குரிமையையும் பறிப்பதற்காக தேசியக்கட்சிகள் ஊடாக சுயேச்சைக் குழுக்கள் ஊடாகக் களம் இறக்கப்பட்டுள்ளனர். அதனை நீங்கள் சரியாக புரிந்துகொள்ள வேண்டும். இவர்கள் எமது அரசியல் ரீதியான போராட்டத்தினை இல்லாதொழிக்க முயற்சிக்கின்றனர்.

இந்நிலையிலேயே எங்களோடு இருந்தவர்கள் எதிரணியில் இருக்கின்ற சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. மும்மொழியிலும் புலமை பெற்ற முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனை தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு நல்ல எண்ணத்துடனே கொண்டு வந்திருந்ததோடு, மாகாணசபையின் முதலமைச்சர் பதவியையும் அவருக்கு வழங்கியிருந்தது.

ஆனால் அவர் இரா.சம்பந்தனின் இடத்திற்கு வர வேண்டும், தமிழ் மக்களுடைய தலைமைத்துவ இடத்தை கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் எங்களுடன் இருந்து குழம்பி வெளியே சென்று விட்டார்.

2013 ஆம் ஆண்டு மாகாண சபை தேர்தலில் போட்டியிடும் போது எனக்கு 28 வயது. அன்றுதான் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் அரசியலுக்கு வந்தார். முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் எனக்கும் அரசியல் ரீதியாக ஒரே வயதுதான். அவரும் 07 வருடம் நானும் 07 வருடம்தான். இதிலே வேறு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

இன்று எங்களோடு பிரிந்து சென்றவர்கள் அவரை தலைமைத்துவவாதியாக காட்டுகின்றனர். குறிப்பாக எங்களோடு பிரிந்து சென்ற சுரேஷ் பிறேமச்சந்திரன் அவரைத் தலைவராக ஏற்றுக்கொண்டு ள்ளமையோடு அங்கு அவர்களுக்கு போதியளவு ஆசனங்கள் எடுக்காவிடின் அங்கும் ஒரு குழப்பத்தை ஏற்படுத்துவதோடு அங்கிருந்து பிரிந்து சென்று விக்னேஸ்வரனைப் பேசுவார். பின்னர் கஜேந்திரகுமாருடன் இணைவார், அங்கும் ஆசனங்கள் கிடைக்காவிடின் அங்கிருந்தும் பிரிந்து சென்று கஜேந்திரகுமாரைப் பேசுவார்.

அவர்களுடைய பேச்சு தெற்கிலே இருக்கின்ற ஐக்கிய தேசிய கட்சியையோ, சுதந்திர கட்சியையோ அல்லது பொதுஜன பெரமுன மீதோ எதிர்ப்பல்ல, மாறாக தமிழ் மக்களுடைய ஏகபிரதிநிதிகளான தமிழ் தேசிய கூட்டமைப்பின் மீதுதான்.

விக்னேஸ்வரனுக்கு யாழ்.மக்கள் வாக்களித்து மக்கள் பிரதிநிதிகளாக மாற்றுகின்ற சந்தர்ப்பத்தில் இன்னொரு சுமந்திரனை உருவாக்கி விடுவீர்கள் என்ற பயத்துடன் அவர்களிற்கு வாக்களியுங்கள். நீங்கள் விக்னேஸ்வரனிற்கு போடுகின்ற ஒவ்வொரு வாக்குகளும் இன்னொரு சுமந்திரனை உருவாக்கும் என்பதை மறந்து விடாதீர்கள். – எனத் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# என்னைப் பிரதமராக்கினால் புதிய யுகத்தைப் படைப்பேன்

## மட்டக்களப்பில் சஜித் சூளுரை

பொதுத்தேர்தலில் தொலைபேசி சின்னத்தை வெற்றிபெறச் செய்து என்னைப் பிரதமராக்கினால் இந்த நாட்டிலே ஒரு புதிய யுகத்தை என்னால் படைக்க முடியும் என உறுதியளிக்கின்றேன்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடி, இராசமாணிக்கம் மண்டபத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கடந்த காலங்களிலே இந்தப் பிரதேசத்துக்கு வீடமைப்புத் திட்டங்களைக் கையளிப்பதற்காக நான் பல தடவைகள் வந்திருக்கின்றேன். இதனால் இந்தப் பிரதேசத்தின் பிரச்சினைகளை நான் நன்கு அறிந்து வைத்துள்ளேன்.

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டிய பின் அமைய இருக்கின்ற புதிய நாடாளுமன்றத்தில் பட்டிருப்புத் தொகுதியில் இருக்கின்ற அனைத்துப் பிரச்சினைகளையும் இனங்கண்டு அவற்றைத் தீர்க்கும் பொருட்டு விசேட செயலணியை அமைத்து அதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு நான் களத்திலே இறங்குவேன் என்று மக்களாகிய உங்களிடம் உறுதியளிக்கின்றேன்.



கடந்த காலங்களிலே இந்த மாவட்டத்தில் இருந்த அரசியல்வாதிகள் பதவிகளைப் பெறுவதற்காக மாத்திரமே மக்களின் வாக்குகளைப் பயன்படுத்தினார்களே தவிர மக்களது நலனோம்பு விடயங்களுக்குப் பயன்படுத்தவில்லை என்பது எனக்குத் தெரியும். மாறாக உங்களது வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் சென்றதும் அந்த அதிகாரத்தை உங்களுக்குப் பாவிக்காமல் அவர்கள் அவர்களுடைய பதவிகளுக்காகவும் அந்தஸ்தைக் கூட்டிக்கொள்வதற்காகவும் பாவித்தார்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகள், 345 கிராம சேவையாளர் பிரிவுகள், 1240 சிறிய கிராமங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து இந்தத் தேர்தலின் மூலம் அமைய இருக்கின்ற நாடாளுமன்றத்தில் பிரதமர் என்ற அடிப்படையில் விசேட செயலணியை எனது தலைமையில் அமைத்து மாவட்டம் பூராகவும் அபிவிருத்தி செய்து தருவேன் என உங்களிடம் கூறிவைக்க விரும்புகின்றேன்.

இந்த மாவட்டத்தின் மூன்று தொகுதிகளையும் நன்கு அறிந்தவன் என்ற வகையில் இது போரால் பாதிக்கப்பட்ட மாவட்டமாகும். இதனால் பல இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்பின்றி உள்ளனர். இதற்காக ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தொழில் பேட்டைகளை அமைத்துத் தொழிலில்லா பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவேன்.

இந்த நாட்டைஅபிவிருத்திப் பாதைக்கு இட்டுச்செல்ல வேண்டுமாக இருந்தால் ஜனாதிபதியாக இருக்கலாம் அல்லது பிரதமராக இருக்கலாம் செய்யவேண்டிய வேலைகளுக்கென ஒழுங்கான முறைமையொன்று இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் வெற்றிகாண முடியாது.

இந்த நாட்டிலே பலதரப்பட்ட பிரச்சினைகள் உள்ளன. மீன்பிடிச் சமூகத்தினர், விவசாய சமூகத்தினர் வறுமையில் வாடிக்கொண்டு இருக்கின்றார்கள். மாறாக நாட்டில் முன்னணியில் இருக்க வேண்டிய கல்வி, சுகாதாரம் என்பன முன்னுரிமை அளிக்கப்படாமல் உள்ளன.

இவை அனைத்தையும் சீர்செய்து இந்த நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டிய தேவை எமக்குள்ளது. எனவே, எதிர்வரும் பொதுத்தேர்தலில் தொலைபேசி சின்னத்துக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்து என்னைப் பிரதமராக்கினால் இந்த நாட்டிலே ஒரு புதிய யுகத்தை என்னால் படைக்க முடியும் என உறுதியளிக்கின்றேன் – என்றார்.

---

### கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு

## பயணியுடன் விருந்தினர் ஐவரை அழைத்துச் செல்வதற்கு அனுமதி

*கட்டுநாயக்க விமான நிலையத்தில் பயணிகள் வெளியேறும் முனையத்திலுள்ள விருந்தினர்களுக்கான பகுதிக்குள், விருந்தினர்கள் ஐவரை அழைத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

*இன்று முதல் இந்த அனுமதி வழங்கப்படுகின்றது என விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.*

*பயணிகள் மற்றும் விருந்தினர்கள் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல் உள்ளிட்ட சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி நடந்துகொள்வது கட்டாயம் எனவும் அவர் மேலும் கூறினார்.*

*கொரோனா வைரஸ் தொற்று பரவலையடுத்து, கடந்த ஜனவரி மாதம் 28ஆம் திகதி முதல் பயணிகள் மற்றும் ஊழியர்களைத் தவிர விமான நிலையத்துக்குள் விருந்தினர்கள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.*

*அதனைத் தொடர்ந்து கடந்த ஜூன் 15ஆம் திகதி முதல் பயணிகளுடன் 03 பேர் செல்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.*

*இந்தநிலையில் தற்போது ஐவருக்கு அவ்வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

---

# இடைத்தரகர்கள் அரிசித் தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கு இடமளிக்க வேண்டாம்

## பொலன்னறுவை விவசாயிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

அரிசித்தட்டுப்பாட்டை ஏற்படுத்த இடைத்தரகர்களுக்கு இடமளிக்க வேண்டாமென பொலன்னறுவை விவசாயிகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரத்திற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜக்ஷ நேற்று பொலன்னறுவைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இங்கு இடம்பெற்ற பல்வேறு மக்கள் சந்திப்புகளிலும் ஜனாதிபதி கலந்து கொண்டதோடு, அங்கு வருகைத்தந்திருந்த மக்களுடனும் சுமுகமாகக் கலந்துரையாடினார்.

இதன்போது, அரிசித் தட்டுப்பாட்டை ஏற்படுத்த இடைத்தரகர்களுக்கு இடமளிக்க வேண்டாமென பொலன்னறுவை விவசாயிகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் விசேடமாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாகக் கருத்துரைத்த ஜனாதிபதி, அழிவுக்குள்ளாகியிருந்த அரிசி களஞ்சியங்களை இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் புனர்நிர்மாணம் செய்வதற்கும் நெல்லை முறையாகக் கொள்வனவு செய்வதற்கும் முறைமை ஒன்றை தயாரித்தனர் எனவும் தெரிவித்தார்.

எதிர்வரும் காலங்களில் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளை பாதுகாத்து பிரச்சினைகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அதேநேரம், மத்திய வங்கி மோசடிக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களை சட்டத்தின் முன் நிறுத்துமாறும் பொலன்னறுவை மக்கள் ஜனாதிபதியிடம் இதன்போது கோரிக்கை விடுத்தனர்.

தொழில் பிரச்சினை, காட்டு யானைகளின் அச்சுறுத்தல் என்பன பொலன்னறுவை மாவட்டத்தின் அதிக பிரதேசங்களில் காணப்படுவதாகவும் இவற்றுக்கு நிரந்தரத் தீர்வை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டனர்.

பொதுஜன முன்னணியில் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரொான் ரணசிங்க, முன்னாள் பிரதி அமைச்சர் சிறிபால கம்லத் மற்றும் வேட்பாளர் ஜகத் சமர விக்கிரம ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

---





## நிந்தவூரில் கரைவலையில் சிக்கிய 15 அடி நீளச் சுறா

நிந்தவூர் பிரதேச கடலில் இன்று காலை கரைவலை மீனவர்களின் வலையில் சிக்கிய 15 அடி நீளமான இராட்சத சுறா மீனவர்களால் கரைக்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

சுமார் 1500 கிலோ நிறையையுடைய இந்த இராட்சத மீன் கொடுப்புளி சுறா இனத்தை சேர்ந்ததாக இருக்கலாம் என மீனவர்கள் கூறுகின்றனர்.

மேலும் கரை வலையை இழுத்து கரைக்கு வரும் முன்பேதான் இம்மீனை மீனவர்கள் கண்டனர் எனவும் வலையில் சிக்கியதால் மீனவர்களால் இழுக்க முடியாமல் உழவு இயந்திரத்தின் உதவியைக் கொண்டு கட்டி இழுத்தனர். அப்போது கடல் தொழில் மீன்பிடி அதிகார சபை அதிகாரிகள் அவ்விடத்திற்கு விரைந்து வந்து அம்மீனை வலையில் இருந்து கழற்றி மீண்டு கடலில் விடுமாறு உத்தரவிட்டனர்.

அண்மைக்காலமாக இது போன்ற இராட்சத மீன் இனங்கள் அம்பாறை மாவட்ட கடற் பிரதேசங்களில் மீனவர்களின் வலையில் அகப்பட்டும், கரை ஒதுங்கியும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.07.2020 இல் வெளியிடப்பெற்றது.